சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 67/2023

வாதிகள் தரப்பு சாட்சி .. 1

பெயர் .. சீனிவாசன்

தகப்பனார் / கணவர் பெயர் ..

தொழில் ..

கிராமம் ..

தாலுக்கா ..

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் நாள் புதன்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் வழக்கில் 4ம் வாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 05.07.2010 தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.1, 05.07.2010 தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.2, 05.07.2010 தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.3, 01.07.2022 தேதிய அறிவிப்பு வா.சா.ஆ.4, தபால் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ.5 (எண்ணிக்கை-3).

முதல் விசாரணை தொடர்ச்சி

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.